# A STUDY ON INFRASTRUCTURE DEVELOPMENT IN THE MUTHUR DIVISIONAL SECRETARIAT DIVISION TRINCOMALEE

Eastern University, Sri Lanka
Faculty of Com. & Mgt.
22 SEP 2006
Department of Commerce

JEY KRISHA MURALEETHARAN

LIBRARY
17 NOV 2006
Eastern University, Sri Lanka

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA

2006

FCM793
Project Report
Library - EUSL

# சுருக்கவுரை

இவ் ஆய்வின் தலைப்பானது "மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஓர் ஆய்வு" இதன் முக்கிய நோக்கமானது மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை அடையாளம் கண்டு அவற்றை ஒழுங்காகப் பராமரிப்பது மட்டுமல்லாமல் பற்றாக்குறையாகக் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏனைய பிரதேசங்களிலிருந்து பெற்று நீண்ட கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி மூதூர் பிரதேசத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை நகரப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ப உயர்த்திக் கொள்வதாகும்.

தரவு ரீதியில் எடுக்கப்பட்ட வினாக்கொத்துக்களின் மூலம் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டே இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான உண்மையான விபரங்களைப் பெறக் கூடியதாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இப்பிரதேசம் நீண்ட காலமாகவே பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மதிப்பீடு செய்வதற்கு மிகச் சிறந்த முறையாகவும் இது காணப்படுகின்றது.

வினாக்கொத்துகளின் மூலம் இப்பிரதேசத்தில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளின் உண்மையான நிலைமையினை அறிந்து கொள்வதோடு இப்பிரதேச மக்கள் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அறிந்து கொள்ள முடியும். கருதுகோளாக்கத்தின் அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளான குடிநீர்இ மின்சாரம்இ போக்குவரத்துஇ தொலைத்தொடர்பு மற்றும் வதிவிட வசதிகள் போன்றவை மாறிவிகளாக எடுக்கப்பட்டுள்ளன. மூதூர் பிரதேச செயலாளர் பிரிவானது 42 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் 15 கிராம சேவகர் பிரிவுகளே மாதிரிகளாக எடுத்து இவ் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்களை வழங்கல், ஆய்வுப்பிரதேசத்தில் வசிக்கும் மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடல், உட்கட்டமைப்பிற்குப் பொறுப்பான நிறுவனங்களின் தலைவர்களுடனான நேரடி சந்திப்பு, சுய மதிப்பீடு போன்ற வழிகளின் மூலம் இவ் ஆய்விற்கான தகவல்கள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் SPSS மற்றும் EXCEL போன்ற கணனி package களின் மூலம் வடிவமைக்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் உள்ள பெருமளவான மக்கள் குடிநீர் உட்பட தமது அன்றாட தேவைகளிற்கு கிணற்று நீரையே பயன்படுத்துகின்றனர். பெரும்பாலான பகுதிகளில் மின்சார பாவனை மிகவும் குறைவான அளவிலேயே காணப்படுகின்றது. அதிகரித்த மின்கட்டணமே இதற்குக் காரணமாகும். போக்குவரத்திற்காக 2 அல்லது 3 (தனியார் மற்றும் மக்கள் பயன்படுத்தப்பட்ட) போக்குவரத்துச் சாதனங்களே

பயன்படுத்தப்படுகின்றன. இங்கு நிலையான தொலைபேசி இணைப்புக்களை விட கையடக்கத் தொலைபேசி இணைப்புக்களை அதிகளவில் காணப்படுகின்றன. கூடுதலான மக்கள் களிமண் மற்றும் ஓலை என்பவற்றினால் அமைக்கப்பட்ட வதிவிடங்களிலேயே வசிக்கின்றனர். அத்துடன் மக்களின் வீடுகள் வைத்தியசாலை, பஸ் தரிப்பிடம், சந்தை மற்றும் வங்கிகளிலிருந்து பெரும் தொலைவிலேயே அமைந்துள்ளன.

குடிநீர், வதிவிட வசதிகள் ஆகிய இரண்டும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளான மின்சாரம்இ போக்குவரத்து, தொலைத்தொடர்பு என்பவற்றை விட ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் இன்றியமையாதன என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. அத்துடன் திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் பொழுது மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

நீர்த்தேக்கங்கள் தனிப்பட்ட வீட்டுக் கிணறுகள் மற்றும் பொதுக் கிணறுகளை அடிக்கடி தூய்மைப்படுத்த வேண்டும். அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிற்கும் மின்சார வசதிகளை வழங்க வேண்டும். போக்குவரத்துச் சாதனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமல்லாமல் சிறு வீதிகளையும் புனரமைப்புச் செய்து பரவலான போக்குவரத்துச் சேவையினை வழங்க வேண்டும். களிமண் மற்றும் ஓலையால் வேயப்பட்ட வீடுகளிற்குப் பதிலாக சீமேந்து ஓடு என்பவற்றைப் பயன்படுத்த வேண்டும். மற்றும் நிலையான தொலைபேசி வசதிகளைப் பரவலாக வழங்க வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் நிலவுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பற்றாக்குறைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும்.

## CONTENTS


| | Page No. |
|---|---|
| Title Pages | i-iii |
| Acknowledgement | iv |
| Abstract – English | v-vi |
| Abstract – Tamil | vii-viii |
| Table contents | ix-xi |
| List of Tables | xii-xiii |
| List of Figures | xiv-xv |
| **Chapter One : INTRODUCTION** | **1-5** |
| 1.1 Background | 1-4 |
| 1.2 Problem Statement | 4 |
| 1.3 Significance of the study | 4 |
| 1.4 Objectives of the study | 5 |
| 1.5 Limitations and Assumptions | 5 |
| **Chapter Two : LITERATURE REVIEW** | **6-21** |
| 2.1 Introduction | 6-13 |
| 2.2 Strategic Planning | 14-15 |
| 2.3 Strategic Planning Process | 16-19 |
| 2.4 Development Plan | 19-21 |
| 2.5 Summary | 21 |

**Chapter Three : CONCEPTULAIZATION & METHODOLOGY** **22-32**

3.1 Introduction 22

3.2 Conceptualization 22-24

3.3 Operationalization 24-27

3.4 Population and Sampling 27-30

3.5 Questionnaire Administration 31

3.6 Questionnaire Development 31

3.7 Data Analysis 32

3.8 Summary 32

**Chapter Four : DATA PRESENTATION AND ANALYSIS** **33-68**

4.1 Introduction 33

4.2 Data Analysis 33

4.3 Data Presentation 33

4.4 Analysis on Personal Information 33-35

4.5 Analysis on Research Information 35-67

4.6 Findings 67-68

4.7 Summary 68

**Chapter Five : DISCUSSION** **69-85**

5.1 Introduction 69

5.2 Discussion on Personal Information 69

5.3 Discussion on Research Information 70-85

5.4 Summary 85

**Chapter Six : Conclusion and Recommendation** 86-99

6.1 Introduction 86

6.2 Strategy Formulation 86-98

6.3 Action Plan 98

6.4 Conclusion 99

**References** I

**Appendix**

Questionnaire – English i-xii

Questionnaire – Tamil i-xi

Map of Muthur Divisional Secretariat Division i

Details of Water supply ii-iv

Details of Housing v-viii

Details of Sanitation ix-xi

Details of Roads xii

Details of Population xiii-xvi